### கோவை இருகூர் அருகே 13 வயது பள்ளிச் சிறுவன் நண்பர்களால் அடித்துக்கொலை:

# பெற்றோர்களும் - ஆசிரியர்களும் கல்வியறிவோடு பொறுமையையும் அன்பையும் மாணவர்கள் மனதில் விதைக்க வேண்டும்!

### கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் வலியுறுத்தல்!

சென்னை, மே 20 –

**கோவை இருகூர் அருகே 13 வயது பள்ளிச் சிறுவன் நண்பர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்ட செய்தியறிந்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மனதைப் பதைபதைக்க வைக்கிறது என்று வருத்தம் தெரிவித்ததுடன், பெற்றோர்களும், ஆசிரியர்களும் கல்வியறிவோடு பொறுமையையும், அன்பையும் மாணவர்கள் மனதில் விதைக்க வேண்டும் என்று சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

கோவை இருகூர் அருகே 13 வயதே ஆன பள்ளிச் சிறுவன் நண்பர்களால் அடித்துக் கொலை செய்யப்பட்டுள்ள செய்தி மனதைப் பதைபதைக்க வைக்கிறது.

பெற்றோர்கள் நம் பிள்ளைகளைத் தொடர்ந்து கவனிக்க வேண்டும். குழந்தைகள் எதைப் பார்க்கிறார்கள், என்ன பேசுகிறார்கள் எனக் கண்காணித்து, அவர்களிடம் ஏற்படும் உளவியல் மாற்றங்களை அறிந்து, நாம்தான் நல்வழிப்படுத்த வேண்டும்.

பள்ளியில் மாணவர்களுடன் அதிக நேரம் செலவிடும் ஆசிரியப் பெருமக்களும் அவர்களிடம் கல்வியறிவோடு பொறுமையையும் அன்பையும் மனதில் விதைக்க வேண்டும் என்பதையே இந்தக் கொடிய நிகழ்வு நமக்கு உணர்த்துகிறது.

நம் மாநிலத்தின் வருங்காலமே குழந்தைகள்தான். அவர்களைப் பொறுப்புடன் வளர்த்தெடுப்பது நம் அனைவரின் சமூகக் கடமை!

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.



திரைப்படத் தயாரிப்பாளர், விநியோகஸ்தர் கே.ராஜன் அவர்கள் மறைவெய்திய நிலையில் சென்னையில் உள்ள அவரது இல்லத்திற்கு கழக இளைஞர் அணிச் செயலாளர் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மறைந்த கே.ராஜன் அவர்களுடைய உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தி, அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் தெரிவித்தார். தமிழ்த் திரைப்படத் துறையின் வளர்ச்சிக்காக தொடர்ந்து குரல் கொடுத்த கே.ராஜன் அவர்களுடைய மறைவு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்! அவரது மறைவுக்கு என் ஆழ்ந்த இரங்கல் என்றும் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளார்.

### கிணத்துக்கடவு தொகுதி கழக வேட்பாளர்

# கே.வி.கே.எஸ்.சபரி கார்த்திகேயன் நன்றி தெரிவித்தார்!

### கிராமம் கிராமமாகச் சென்று வாக்காளர்களை சந்தித்தார்!

*கிணத்துக்கடவு, மே 20 - கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் வேட்பாளராக போட்டியிட்ட கோவை தெற்கு மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி.கே. எஸ்.சபரி கார்த்திகேயன் கிணத்துக்கடவு பேரூர் கழகம் மற்றும் கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியத்தில் வாக்காளர்களுக்கு நன்றி தெரிவித்தார்.*

*இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், கிணத்துக்கடவு மேற்கு ஒன்றியச் செயலாளர் கல்லாபுரம் செந்தில், மதுக்கரை கிழக்கு ஒன்றிய செயலாளர் திருமூர்த்தி, பேரூர்க் கழகச் செயலாளர் கனகராஜ், பொதுக்குழு உறுப்பினர்கள் சே.நடராஜ், திருமதி மஞ்சு சௌமியா*

*கிணத்துக்கடவு பேரூராட்சி மன்றத் தலைவர் கதிர்வேல், கிணத்துக்கடவு முன்னாள் பேரூராட்சி மன்றத் தலைவர் கதிர்வேல், கிணத்துக்கடவு பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் பாலகுமார், தே.மு.தி.க. மாவட்ட தலைவர் எல். ஜே. ஜே.ஜெகன், இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் சல்மான், புவனேஷ், விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஜெகதீஸ், தலைமைக் கழக பேச்சாளர் தமிழ் பித்தன் மற்றும் முன்னாள், இந்நாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், கிளை கழக செயலாளர்கள், பாக முகவர்கள், கழகத் தோழர்கள் மகளிர் அணியினர் இளைஞர் அணியினர், தோழமைக் கட்சியினர் திரளாக கலந்து கொண்டனர்.*



தி.மு.க. தலைமை நிலைய செயலாளரும் தென்னிந்திய நடிகர் சங்க துணைத் தலைவருமான பூச்சி எஸ்.முருகன் – மீனாட்சி முருகன் தம்பதி, நேற்று முன்தினம் (18.05.26) மாலை திருநெல்வேலி மூன் மஹாலில் மதுரை மாநகராட்சி மாமன்ற உறுப்பினரும் பழங்காநத்தம் பகுதிச் செயலாளருமான எஸ்.வி.சுதன் அவர்களின் இல்ல விழாவில் கலந்து கொண்டு செல்வி ரியா தேவியை வாழ்த்தினர். மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி உடன் வாழ்த்தினார்.

### திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி.கலைவாணன் எம்.எல்.ஏ. இல்லத்திருமண விழா!

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமை ஏற்று நடத்தி வைத்தார்!

### உதயநிதி ஸ்டாலின் – டி.ஆர்.பாலு – கே.என்.நேரு – முன்னணியினர் பங்கேற்பு!

திருவாரூர், மே 20 – திருவாரூர் மாவட்ட செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம். எல்.ஏ.அவர்களின் சகோதரரும், கொரடாச்சேரி பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் அவர்களின் தந்தையுமான மறைந்த திருவாரூர் மாவட்டச் செயலாளர் பூண்டி. கே.கலைசெல்வம் அவர்களின் மகள் கலையழகி – ராம்பாலாஜி ஆகியோரின் திருமண நிகழ்வை தஞ்சாவூரில் தமிழ்நாடு அரசின் முன்னாள் முதல்வர், கழக தலைவர், திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை ஏற்று நடத்தி வைத்தார்.

இந்த திருமண நிகழ்வுக்கு கழக இளைஞர்அணி செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவருமான உதயநிதி ஸ்டாலின், கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, முதன்மை செயலாளர் கே.என்.நேரு, துணைப்பொதுசெயலாளர்கள் ஆ.இராசா, க. பொன்முடி உள்ளிட்டோர் முன்னிலை ஏற்றனர்.

ஒன்றியச் செயலாளர் ஆர். பாலச்சந்திரன் அனைவரையும் வரவேற்றார்.

சி.பி.ஐ. முன்னாள் மாநில செயலாளர் இரா.முத்தரசன், முன்னாள் மத்திய அமைச்சர் எஸ்.எஸ்.பழனிமாணிக்கம், முன்னாள் அமைச்சர்கள் ரகுபதி, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், எஸ்.எஸ்.சிவசங்கர், டி.ஆர்.பி.ராஜா, அன்பில் மகேஷ்பொய்யாமொழி, சிவ. வீ.மெய்யநாதன், கோவி.செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் ச.முரசொலி, அருண் நேரு, வை.செல்வராஜ், தமிழ்நாடு அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ். விஜயன், இளைஞர்அணி மாநில துணை செயலாளர் ந.இளையராஜா, சட்டமன்ற உறுப்பினர்கள் துரை.சந்திரசேகரன், ஆர். வைத்தியலிங்கம், கே.மாரிமுத்து, எஸ்.டி.பி.ஐ. கட்சி மாநில தலைவர் முகமது முபாரக், பி.ராஜமாணிக்கம், சயக்கோட்டை அன்பழகன், சோம.செந்தமிழ்ச்செல்வன் உள்ளிட்டோரும்.

மாவட்டக் கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் க.தன்ராஜ், மு.வெங்கடேசன், எம்.எஸ். கார்த்திக், எம்.ராமகிருஷ்ணன், சாந்தி பாஸ்கர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் தலையாமங்கலம் ஜி.பாலு, ப. ஆடலாரசன், சு.ஞானசேகரன், த.செல்வம், த.கணபதி உள்ளிட்டோரும்,

ஒன்றியச் செயலாளர்கள் வீ.அன்பரசன், வி.எஸ்.ஆர். தேவதாஸ், எஸ்.ஜோதிராமன, கொ.தேட்சிணாமூர்த்தி, பாலா. ஞானவேல், புலிவலாம். ஏ. தேவா, சேகர். கலிய பெருமாள், ஐ.வி.குமரேசன், பா.பிரபாகரன், வே.மனோகரன், இரா. மனோகரன், ப.பிரகாஷ், சித்தேரி. சிவா, டி.எஸ்.டி.முத்துவேல், எஸ்.ஏ.செல்வராஜ், நா. கவியரசு, கே.வி.கே.ஆனந்த், நகரச் செயலாளர்கள் வாரை. எஸ். பிரகாஷ், வீரா.கணேசன், ஆர்.எஸ்.பாண்டியன், எஸ். வி.பக்கிரிசாமி, பா. சிவநேசன், வ.பக்கிரிசாமி,சிவ.தியாகு, ஏ. கே.டி. சேரன் உள்ளிட்டோரும். பொதுக்குழு உறுப்பினர்கள் கலியபெருமாள், டி.செந்தில், கே. எஸ். எஸ். தியாகபாரி, பிரித்விராஜன், கமாலுதீன், ஆர்.முருகேசன், ராஜபூபாலன், காஞ்சித்துரை, செல்வா. ஜெயதேவன், கலைவாணிமோகன், நகர்மன்றதலைவர்கள் புவனப்ரியா செந்தில் , பாதிமா பஷீரா, மன்னை த.சோழராஜன், கவிதாபாண்டியன், கலைச்செல்வி முருகேசன், ஆர்.ராமராஜன், மகாலெட்சுமி முருகேசன், ஷர்மிளா சிவநேசன், ராஜசேகரன், மும்தாஜ் நவாஸ்கான், கீதா நாகராஜ் மற்றும் இளைஞரணி அமைப்பாளர் பனங்குடி ஏ.எஸ்.குமார், மகளிர் அணி அமைப்பாளர் ஷோபா கணேசன் உள்ளிட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கழக தோழர்கள் பெருந்திரளாக பங்கேற்றனர்.

திருமண விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் மாவட்டக் கழகச் செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான பூண்டி கே.கலைவாணன் நன்றி கூறினார்.



கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் சி.வெ.கணேசன் எம்.எல்.ஏ., மேல்பாட்டாம்பாக்கம் பி.என். பாளையம் நினைவில் வாழும் (மிசா) ஏழுமலை அவர்களின் மகன் முன்னாள் மாவட்டப் பிரதிநிதி முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் ஏ.மனோகர் மறைவையொட்டி நேற்று நடைபெற்ற படத்திறப்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு குடும்பத்தினர்களுக்கு ஆறுதல் தெரிவித்தார். அண்ணாகிராமம் கிழக்கு ஒன்றியக் கழகச் செயலாளர் வி.கே.வெங்கட்ராமன், ஆதிதிராவிடர் நலக்குழு துணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் இள.புகழேந்தி, பண்ருட்டி நகரக் கழகச் செயலாளர் க.ராஜேந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள், ஆர்.எஸ்.எம்.தணிகைசெல்வம், ஆனந்தி சரவணன், மேல்பாட்டாம்பாக்கம் பேரூர்க் கழகச் செயலாளர் ஜெயமூர்த்தி அண்ணாகிராமம் மேற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் ராமசந்திரன், கழக பொதுக்குழு உறுப்பினர் நா.பலராமன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### சாலையில் சுற்றித் திரியும்

# தெருநாய்களை அகற்ற வேண்டும்! உச்சநீதிமன்றம் தீர்ப்பு!

புதுடெல்லி, மே 20–

சாலைகளில் சுற்றித்திரியும் தெருநாய்கள் பொதுமக்களுக்கு பல்வேறு அச்சுறுத்தல்களை ஏற்படுத்தி வருகிறது. இதுதொடர்பாக தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், நாய்களை பிடித்து அதற்கென உருவாக்கப்பட்டுள்ள காப்பகங்களில் அடைக்க வேண்டும் என்று ஒன்றிய மற்றும் மாநில அரசுகளுக்கு உத்தரவிட்டது. இதனை எதிர்த்து தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உச்சநீதிமன்றம், இன்று தீர்ப்பு வழங்கியது. அதில், சாலைகளில் சுற்றித்திரியும் தெருநாய்களை பிடித்து அகற்ற வேண்டும் என்ற உத்தரவுக்கு தடை விதிக்க முடியாது என்று உச்சநீதி மன்றம் திட்டவட்ட மாக தெரிவித்துள்ளது. விலங்குகள் நலவாரிய விதிமுறைகள் உரிய முறையில் செயல்படுத்தப்படவில்லை என்று உச்சநீதிமன்றம் குற்றஞ்சாட்டியுள்ளது. கருத்தடை மற்றும் தடுப்பூசி விதிமுறைகளை முறையாக ஒன்றிய, மாநில அரசுகள் செயல்படுத்தவில்லை என்று கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இதன் காரணமாகவே நாய்களால் தற்போது பிரச்சினைகள் அதிகரித்துள்ளன. தெருநாய்களால் பொதுமக்களுக்கு ஆபத்து அதிகமாகியுள்ளது. நாய்கள் கடிக்கும் புகார்கள் அதிகரித்துள்ளன. நாய் கடிகளால் சிறுவர், சிறுமியர் அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர். விமான நிலையங்களில் கூட நாய்கள் கடிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

எனவே பொது இடங்களில் உள்ள நாய்களை பிடித்து அகற்ற வேண்டும் என்ற உத்தரவுக்கு தடை விதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் திட்டவட்டமாக தெரிவித்துள்ளது. நாய்கள் மூலம் பொதுமக்களுக்கு ஏற்படும் ஆபத்தை தடுக்க வேண்டும். நாய்களுக்கு உரிய தடுப்பூசி போட வேண்டும். நாய்களை பிடித்து மறுவாழ்வு மையங்களில் அடைக்க வேண்டும் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் விலங்குகள் நல மையங்களை ஏற்படுத்த வேண்டும் என்று உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பசும்பொன் தா. கிருட்டிணன்
### மே 20 (2003)



**கல்லூரியில் பயிலும் போதே மாணவர் தி.மு.க.வில் தீவிரமாகப் பணியாற்றி அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரின் நன்மதிப்பைப் பெற்றவர்.**

**மாவட்டக் கழகச் செயலாளராகவும், ஊராட்சி மன்ற பெருந்தலைவராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும், நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியவர்.**


**1996ஆம் ஆண்டு தமிழக சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு, நெடுஞ்சாலைத் துறை அமைச்சராகப் பணியாற்றியவர்.**

**கழகம் நடத்திய அனைத்துப் போராட்டங்களிலும் பங்கேற்று சிறை சென்றவர்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### பி.டி.ஆர். பழனிவேல்ராசன்
### மே 20 (2006)



**தமிழக சட்டமன்ற உறுப்பினராக நான்கு முறையும் – சட்டமன்ற மேலவை உறுப்பினராகவும், தமிழக சட்டமன்ற பேரவைத் தலைவராகவும் – பின்னர் தமிழக அரசின் அறநிலையத் துறை அமைச்சராகவும் பணியாற்றியவர்.**

**கழகத்தின் சொத்து பாதுகாப்புக் குழு தலைவராகவும் பணியாற்றியவர்.**

**"அவரை நினைக்கும்போதெல்லாம் அவரது அடக்கமும், பண்பும், சான்றாண்மையும் பளிச்சிடுகின்றன" என தலைவர் கலைஞர் அவர்கள் நினைவுகூர்ந்தார்.**

தலைமைக் கழகம்
தி.மு.க.